THE HON. SRI R. VENKATARAMAN : Ground celestite power can be used to remove iron impurities in caustic soda. It is also used as a filler in rubber and asphaltic compositions. But if the sulphate is converted to a carbonate with soda ash and treated with the appropriate acids to various salts of strontium, it is more useful.

Cases of suicide

9-30 a.m. * 55 *Q.*—SRI S. B. ADITYAN : Will the Hon. the Minister for Home be pleased to state the number of cases of suicide in the State during the last three years?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :

1954	3,415	cases.
1955	3,062	do.
1956	2,515	do.

SRI A. GOVINDASAMY : இந்த தற்கொலைகளுக்கு கிடைத்திருக்கிற காரணங்கள் என்ன என்பதை தெரிவிக்க முடியுமா ? பசி, பட்டினி, வேலையில்லா திண்டாட்டம், காதல் இந்த விவகாரங்களின் காரணமாகத்தான் நடப்பதாக சொல்லப்படுவது உண்மையா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இயற்கை அழகும், செயற்கை அழகும், பொருளாதார வளர்ச்சியும் அடைந்திருக்கிற நாடான சுவிட்ஜர்லாந்தில்தான் தற்கொலைகள் அதிகம் என்று தெரியவருகிறது. நான் குறிப்பிட்டபடி 1956-வது ஆண்டில் 2,515 தற்கொலைகள் நடந்திருப்பதாக சொன்னேன். எந்தெந்த காரணங்களால் அவைகள் நடந்திருக்கிறது என்பதை சொல்லுகின்றேன். அதன் விவரம்—

Unemployment or poverty or domestic difficulties.	89
Sickness	1,274
Family quarrel	388
Love affairs	102
Mental disorders	118
Other reasons	544

SRIMATHI M. P. SARATHY : இப்போது சொல்லப்பட்டதில் குடும்பத்தோடு தற்கொலை எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதன் விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை.

SRI S. LAZAR : Sir, great philosophers and practical psychologists are of the opinion that want of faith in God is the main reason for people committing suicide. May I know how far this principle is applicable to these cases?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Hon. members will see that the analysis which I have given does not prove that dictum.

SRIMATHI T. N. ANANDANAYAKI : சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் வியாதிகள் பீடிக்கப்பட்டதின் காரணமாக ஆயிரக் கணக்கான பேர்கள் தற்கொலை செய்திருப்பதாக தெரிவித்தார்கள். இவ்விதம் நோய் பீடிக்கப்பட்டிருப்பதின் காரணம் அதிகமாக ஆஸ்பத்திரிகள் இல்லை என்ற காரணத்தினாலா அல்லது நல்ல டாக்டர்களை அதிகமாக

1st November 1957]

நியமிப்பதற்கு பணம் இல்லாத காரணத்தினுலா ? அப்படி யென்ருல் இதை நீக்குவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதா ? என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஆஸ்பத்திரிகள் எல்லாம் சிறந்த முறையில்தான் அமைக்கப்பட்டு வருகின்றன. அவ்விதமிருந்தாலும் சில கொடிய வியாதிகள் நம்மை விடுவதில்லை. இதன் மூலமாகத்தான் சில தற்கொலைகள் நடைபெறுகின்றன.

SRI P. DURAISAMI REDDIYAR : தலைவர் அவர்களே, இந்த அசெம்பிளியில் நடக்கும் விவாதத்திலும், கேள்வி விடைகள் நேரத்தின் போதும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கொண்டு வந்து பேசும் போதும் நடக்கின்ற காலதாமதத்தை அங்கத்தினர்கள் கவனிக்காமல் பேசுவது சரியா ?

MR. SPEAKER : இந்த கேள்விக்கும் நீங்கள் சொல்வதற்கும் ஒரு விதமான சம்பந்தமும் இல்லை. ஆதலால் இந்த கேள்விக்கு அவசிய மில்லை.

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, இந்த தற்கொலைகளின் எண்ணிக்கை குறைந்து கொண்டிருந்த போதிலும், மக்களிடையே தற் கொலை செய்து கொள்ளும் மனப்பான்மை குறைந்திருப்பதாக தெரிய வில்லை. இப்போது வெளி வந்து கொண்டிருக்கிற செய்திகளைப் பார்த்தால் " நான் இந்த நாட்டில் இருக்க ஆசைப்படவில்லை, ஆண்டவன் திருவடி களிலே போய் சேர்ந்திருக்க ஆசைப்படுகிறேன் " என்று குறிப்பிட்டு பலர் தற்கொலை செய்து கொண்டிருக்கிருர்கள் என்பது அரசாங்கத்திற்கு தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அவ்வாறும் நிகழ்ந்திருக்க கூடும் என்றுதான் அரசாங்கம் கருதுகிறது. தனிப்பட்ட வாழ்க்கையில் மாத்திரமல்ல பொது வாழ்க்கையிலும் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய மனப்பான்மை இப்போதும் இருந்து கொண்டுதான் இருக்கிறது. இதை தவிர்ப்பதற்கு எல்லா அங்கத்தினர்களும் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

SRI N. K. PALANISAMI : ஸார், தற்கொலை செய்து கொள்ள முயற் சித்ததாக எத்தனை பேர்கள் தண்டிக்கப்பட்டார்கள் என்பதை மந்திரி அவர்கள் சொல்லவில்லை. இம்மாதிரியான தற்கொலைகள் நடப்பதெல்லாம் வறுமையின் காரணமாகவும், வேலையில்லா திண்டாட்டத்தின் காரண மாகவும், வேறு வழியில்லாமலும்தான் தற்கொலை செய்து கொள்ளு கிருர்கள். ஆகவே இவர்களை தண்டிக்காமல் இருப்பதற்கு வேண்டி ஏதாவது விதிகளை மாற்றுவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : விதிகளை மாற்றுவது என்பது முடியாத காரியம். வேலையில்லா திண்டாட்டம் மற்றும் பல கஷ்டங் களை மாற்றுவதற்கு ஏதாவது வழி செய்து கொடுத்தால் தான் அவர் களுக்கு ஏதாவது ஆறுதல் எற்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

Secretariat Central Cash Bureau

* 56 *Q.*—SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether there was any misappropriation of funds recently in the Central Cash Bureau attached to the Finance Department;

(*b*) if so, the number of cases of misappropriation and the amount involved;

(*c*) the action taken against the persons responsible; and

(*d*) the measures taken to prevent such misappropriation in future?